# கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல்!

## சீமானுக்கு புதுச்சேரி தி.மு.க. கண்டனம்!

புதுச்சேரி, நவ. 25-

எஸ்.ஐ.ஆர். குறித்து கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல் நடத்திய சீமானுக்கு புதுச்சேரி மாநில திமுக தமது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

அரசியல் கட்சியின் தலைவர்களுக்கு பெருந்தன்மையும், முதிர்ச்சியும் பொறுமையும் தேவை. பொது விவாதங்களில் பொதுமக்களும், செய்தியாளர்களும் அவர்களிடம் வைக்கும் கேள்விகளுக்கு நிதானத்துடனும், மரியாதையுடனும் பதிலளிக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றவர்கள் பத்திரிகையாளர்களின் எவ்விதக் கேள்விகளுக்கும் கோபமின்றி பதிலளித்து அவர்களின் உறவைப் பேணி வந்தனர். அதே வழியில் தான் கழகத் தலைவர் தளபதி அவர்களும் பத்திரிக்கையாளர்களை எதிர்கொள்கிறார்.

ஆனால் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் போன்ற அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு முறையாக பதில் கூறாமல் அவர்கள் எந்த பத்திரிகை, எந்த ஊடகம் என்று விசாரித்து மிரட்டுவதும், பொது வெளியில் அவர்களை ஒருமையில் பேசுவதும் தனது தற்குறி பரிவாரங்களுடன் அவர்களை அவமரியாதை செய்வதையும் தொடர் கதையாக வைத்துள்ளார். இதுபோன்ற அநாகரிகச் செயலில் சீமான் தொடர்ந்து ஈடுபடுவதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

பத்திரிகையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதிலளிக்காமல் அவர்களை அவமரியாதை செய்வது இவர்களின் வக்கிர புத்தியை காட்டுகிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கும் கண்ணியம் கூட இவருக்கு இருப்பதில்லை.

இன்று புதுச்சேரி வில்லியனூர் தனியார் திருமண நிலையத்தில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சீமான், எஸ்.ஐ.ஆர். பற்றி கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் ராஜீ என்பவரை அவர் எந்த தொலைக்காட்சி என்று கேட்டு உன்னையெல்லாம் எவன் கேள்வி கேட்கச் சொன்னது. உனக்கெல்லாம் என்ன யோக்கியதை இருக்கிறது என்று ஒருமையில் தரக்குறைவான வார்த்தையில் திட்டி அவரை கேள்வி கேட்கக் கூடாது என்று மிரட்டி இருக்கிறார். அத்துடன் தன்னுடன் வந்தவர்களை ஏவி தொலைக்காட்சி நிருபரை நெட்டித் தள்ளி தாக்கச் செய்துள்ளார். இது மிக கேவலமான அத்துமீறல் என்பதுடன் ஜனநாயகத்தை கேள்விக் கூத்தாக்கும் செயலாகும்.

செய்தியாளர்களுக்கு துணையாக யாரும் இல்லை என்ற எண்ணத்தில் தனது ஆட்களைவைத்து அவர்களை தாக்குவது காட்டுமிராண்டித் தனமாகும். ஆனால் எங்கள் கழகம் அப்படி எங்களை வளர்க்கவில்லை. சமூக நீதி வழியில் நாங்கள் வீறுநடை போடுகிறோம்.

கலைஞர் தொலைக்காட்சியுடன் அரசியல் ரீதியாக சீமான் மோதட்டும். நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். அதைவிடுத்து அப்பாவி செய்தியாளரிடம் மோதுவது கீழ்த்தரமான செயலாகும். இதுகுறித்து புதுச்சேரி பத்திரிகையாளர் சங்கத்தினர் வில்லியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். காவல் துறை உரிய நடவடிக்கையை பாகுபாடின்றி எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

## அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு !

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கடந்த 23.05.2025 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியம் பிரிக்கப்பட்டு, அதற்கு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறு பிரிக்கப்பட்ட அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியம்**
**பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**

1. ஜே. பார்த்தசாரதி, பெரும்பேர் கண்டிகை கிராமம்.
2. டி. கருணாகரன், பாப்புராயன்பேட்டை கிராமம்.
3. ஜே. வெங்கடேசன், திம்மாபுரம் கிராம்.
4. பி. இந்துமதி, ராமாபுரம் கிராமம்.
5. ஏ.முகமதுகனி, எலப்பாக்கம் கிராமம்.
6. ஆர். ரகு, சிறுபேர்பாண்டி கிராமம்.
7. சீனிவாசன், ராமாபுரம் கிராமம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - நந்தனம் கி.மதி எம்.சி. ஆலோசனை வழங்குகின்றனர்!

## 123 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### வட்ட கழக செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை!

சென்னை, நவ. 25-

மயிலை மேற்கு பகுதி 123 வது வட்ட கழகம் சார்பில் வட்ட செயலாளர் மு.இ. ஏழுமலை அறிக்கை வருமாறு:

நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு வட்ட கழகம் முழுவதும் உள்ள தெருக்கள் பாகவாரியாக நலத்திட்ட நிகழ்ச்சிகள் செய்திட மாவட்ட கழக செயலாளர் அறிவுறுத்தலின் பேரில் மேற்கு பகுதி கழக செயலாளர் வழிகாட்டுதலின்படி நிகழ்ச்சிகள் செய்திட வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.11.2025) மாலை 6 மணி அளவில் காமராஜர் தெரு, வட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் எம். கே. ஆலை ஆனந்த் தலைமையில் நடைபெறுகிறது.

துணைச் செயலாளர்கள் பி. பார்த்திபன், எஸ். எல். மணிகண்டன், எம். உஷா, பொருளாளர் எஸ். மாரிமுத்து, பகுதி பிரதிநிதிகள் எஸ். செல்வமணி, டி. ஜெகநாதன், ஆர்.அசோக் குமார், ஏ.விஜயகுமார் மற்றும் மாநில மாவட்ட பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு இந்த கூட்டத்தை சிறப்பிக்குமாறு மு.இ.ஏழுமலை கேட்டுக் கொண்டு அறிக்கையை விடுத்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டக்கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனையின்படி, வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. முன்னிலையில் 175 (அ) வட்டத்தில் 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் இணைந்தனர். உடன் வி.சக்திவேல், பொ.த.எழில்வாணன், சே.மைதிலி, ந.டில்லிகுமார், த.ஜெகதீசன், என்.நேசன், க.தனசேகரன், ரூபேஷ் உள்ளனர்.

---

## தி.மு.க. மருத்துவ அணி
### மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் & மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

தி.மு.க. மருத்துவ அணி

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் **26.11.2025** புதன்கிழமை காலை **10.00** மணி அளவில், சென்னையில் உள்ள **ஹோட்டல் அக்கார்ட்டில்** (கோபதி நாராயணா சாலை, தியாகராயர் நகர், சென்னை) மருத்துவ அணி மாநிலத் தலைவர் **மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி.** அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : **கழக ஆக்கப் பணிகள்**

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : **22.11.2025**

**மருத்துவர் எழிலன் நாகநாதன்** எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

---

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் – மீஞ்சூர் பேரூர் தி.மு.க சார்பில்

## நவ.27 இளைஞர் எழுச்சி நாள் - எஸ்.ஐ.ஆர். ஆலோசனைக் கூட்டம்!

### க.சு.தமிழ் உதயன் முன்னிலை! ராஜேந்திரன் தலைமை!

திருவள்ளூர், நவ.25-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் பேரூர் தி.மு.க சார்பில், நவ.27 இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடுவது மற்றும் S.I.R பணிகளை குறித்த ஆலோசனை கூட்டம் (22.11.2025) அன்று மீஞ்சூர் பேரூர் கழக அவைத் தலைவர் ராஜேந்திரன் தலைமையில், கழக பேரூர் செயலாளர் க.சு.தமிழ் உதயன் முன்னிலையில் மீஞ்சூர் எழில் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மீஞ்சூர் பேரூர் சார்பாகவும், வார்டு வாரியாக இளந்தலைவர் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்தும், பூத் வாரியாக நடைபெற்று கொண்டு இருக்கும் S.I.R கணக்கீட்டு முகாமில் BLA2, BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் அனைத்து வாக்காளரும் தங்களுடைய படிவத்தை பூர்த்தி செய்ய உதவிடவும், தகுதியுடைய ஒரு வாக்காளர் கூட விட்டுவிடாமல் செயல்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டன. மேலும் நடைபெற்று கொண்டு இருக்கும் S.I.R வாக்காளர் கணக்கீட்டு சிறப்பு முகாம் பற்றி பொதுமக்களுக்கு தெரியும் வகையில் விழிப்புணர்வு ஆட்டோ துவக்கி வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆதி திராவிடர் நல குழு தலைவர் மீ.வி. கோதண்டம், பேரூராட்சி துணைத் தலைவர் ப. அலெக்சாண்டர், வார்டு செய்லாளர்கள், வார்டு கவுன்சிலர்கள், பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மூத்த முன்னோடிகள், பாக மேற்பார்வையாளர்கள், BLA2, BDA, BLC மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.





கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, வெங்கு தெருவில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில், 23.40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பார்வையாளர் மாடத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார்.

---


மறைவு: 25.11.2015

சென்னை தெற்கு மாவட்டம் – சைதை கிழக்கு பகுதி
168(அ) வட்ட தி.மு.க அவைத்தலைவர்

நெருப்புமேடு D.முத்து அவர்களின்

10ம் ஆண்டு நினைவஞ்சலி!



உங்களை மறந்தால்தானே நினைப்பதற்கு... எந்நாளும் உங்கள் நினைவில்...

எப்போதும்
தலைவர் தளபதி
வழியில்
எம்.கிருஷ்ணமூர்த்தி
சைதை மேற்கு பகுதி செயலாளர் – 10வது மண்டலகுழுத் தலைவர்

எம்.செந்தில்குமார் MTC ❖ எம்.பாரத்
மற்றும் குடும்பத்தினர்


---

பென்னாகரம் - ஏரியூர் - ஆரல்குந்தி

## மோ.ராஜமுத்துவின் புதிய இல்லம்!

### பி.என்.பி.இன்பசேகரன் திறந்து வைத்தார்!

தருமபுரி, நவ. 25 -

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் சட்ட மன்ற தொகுதியில் ஏரியூர் ஒன்றியம், பத்ர அள்ளி ஊராட்சி, ஆரல்குந்தி கிளைக் கழக பொருளாளர் மோ.ராஜமுத்து சாலம்மாள் சிவக்குமார் , சிவா அவர்களால் புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய இல்லத்தை தருமபுரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் பென்னாகரம் சட்ட மன்ற உறுப்பினருமான, கழக மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் , பி.என்.பி.இன்பசேகரன், B தலைமையேற்று திறந்து வைத்தார் .

இதில் தருமபுரி மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளரும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆரல்குந்தி ஆசி. தனபாலன், அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

உடன் ஏரியூர் ஒன்றிய திமுக செயலாளர் என்.செல்வராஜ், பென்னாகரம் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் மடம் க.முருகேசன், தருமபுரி மாவட்ட மருத்துவரணி, லோட்டஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி உரிமையாளர் சன் மினரல் வாட்டர் தொழிலதிபர் மருத்துவர் பி.என்.பி.ராஜசேகரன், தருமபுரி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பி. என்.பி.மு.மோகனா முனியப்பன் ஆசிரியர் ,

பத்ர அள்ளி ஊராட்சி கழக மூத்த முன்னோடி ஆரல்குந்தி கடைக்கார ஏ. கே.கிருஷ்ணன், முன்னாள் கிளைக் கழகச் செயலாளர் எ.எம்.சின்னையன்,

பென்னாகரம் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் எம்.பெரியண்ணன், ஆரல்குந்தி கிளைக் கழக அவைத் தலைவர் ஆசிரியர் மாணிக்கம் , ஏரியூர் ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு அமைப்பாளர் ஸ்ரீ கடவுள் கன்சல்டிங் உரிமை யாளர் ஏ.கே.சி. வைத்தீஸ்வரன், ஏரியூர் ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எ.பெருமாள், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் பே.சின்னசாமி, ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ரா.குமார் உள்ளிட்ட ஏராளமான கழக உடன்பிறப்பு கள் உடனிருந்து சிறப் பித்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சமயநல்லூர் செல்வராஜ்
### நவம்பர் 25 (2012)



சமயநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர்.

“இளமைக் காலத்திலேயே, மாணவப் பருவத்திலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே சுயமரியாதை வீரராகத் திகழ்ந்தவர். அவர் முடிவெய்துகிற வரையில் முனை முறியாமல்; திராவிட இயக்கச் சிந்தனையாளராக சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**